Written by Administrator
Friday, 28 August 2009 12:12 -

□□□□□□□□ **28.08.2009**

திடக்கழிவு திட்டத்தை செயல்படுத்த பொள்ளாச்சி நகராட்சியிடம் 'கூட்டு'

ஜூன்ஊத்துக்குளி பேரூராட்சி முடிவு

பொள்ளாச்சி, ஆக. 28-

ஜூன் ஊத்க்குளி பேரூராட்சியில் திடக்கழிவுத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு பொள்ளாச்சி நகராட்சியிடம் இணைந்து செயல்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜூன்ஊத்துக்குளி பேரூராட்சி கவுன்சில் கூட்டம் நேற்று காலை தலைவர் விக்கம்மாள் தலைமையில் நடத்தது.

கூட்டத்தில் நடந்த விவாதம்:

முருகானந்தன் (தே.மு.தி.க.): வசதியாக இருப்பவர்களின் பெயரும் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

தலைவர்: சொந்த வீட்டுமனைப் பட்டாஇல்லாதவர்களின் பெயர்கள் மட்டுமே பட்டியலில் சேர்த்தால் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும். அப்போது பயனாளிகள் உரிய பயனை அடையலாம்.

அன்புச்செல்வன் (இ.மு.க.): மயானத்தை சுற்றிலும் குப்பைக்கழிவுகள் கொட்டப்படுதால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது.

தலைவர்: மயானத்தில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு, குப்பைக் கழிவுகள் கொட்ட தனியாக இடம் ஒதுக்கப்படும்.

வெள்ளைச்சாமி (அ.இ.மு.க.): புதிதாக கட்டப்படும் அனைத்து வீடுகளுக்கும் குறைவான வரியை வசூலிக்க பரிசீலிக்க வேண்டும்.

தலைவர்: வரி விதித்தால் தான் வளர்ச்சிப்பணி மேற்கொள்ள முடியும். வரி விதிக்காமல் நிர்வாகம் செய்ய முடியாது.

இவ்வாறு, கூட்டத்தில் விவாதம் நடந்தது.

பொள்ளாச்சி நகராட்சியுடன் இணைந்து, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துவது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் மாவட்ட கலெக்டரிடம் அனுமதி பெறுவதற்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.